**சிறு நிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------------------

சிறுநிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் (எஸ்ஏபிபி) 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூன் 26 ஆந் திகதிய 2000001843 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை, 2017 நவம்பர் 21 ஆந் திகதிய 2000001984 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2019 மே 16 ஆம் திகதிய 2000002639 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பவற்றின் 9.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், விவசாய அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் எஸ்ஏபிபி இற்காக ஸ்தாபிக்கப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு அமுல்ப்படுத்கல் முகவராக உள்ளது.
வணிகம் சார்ந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமையில் ஈடுபட்டுள்ள 57,000 சிறுநிலவுடமையாளர் குடும்பங்களின் வருமானம் மற்றும் உணவு தரத்தை நிலையாக அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும்.
செயற்திட்டத்தின் செயற்பாடுகள் வணிக பங்குடமைக்கான அணுகல், கிராமிய நிதிக்கான அணுகல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கை உரையாடல் ஆகிய மூன்று கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகிறது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா. 17,170 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 105.03 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா. 8,892 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 54.4 மில்லியன் தொகை விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிப்புச் செய்யப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா. 8,278 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 26 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட செயற்பாடுகளின் பூர்த்தி செய்தல் திகதி 2025 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 754/756 ஆம் இலக்க நிதிப் பிரமாணம் | 2023 ஆம் ஆண்டிற்கான இருப்பு புத்தகத்தை நிகழ்ச்சித்திட்டமானது சரியாக தயாரிக்கவில்லை மற்றும் 2024 பெப்ரவரி 28 ஆம் திகதிக்குள் 754/756 ஆம் இலக்க நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சமப்படுத்தியிருக்க வில்லை. மேலும், 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான இருப்பு மதிப்பீடானது 2024 பெப்ரவரி 28 ஆம் திகதிக்குள் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | Excel பணிப் புத்தகம் (Excel work book ) ஆனது நிலையான சொத்துப் பதிவேடாகப் பேணப்படுகின்றது. 2021 இன் இருப்பு மதிப்பீடானது நிறைவு செய்யப்பட்டு அறிக்கை காணப்படுகின்றது. SAPP இனால் நியமிக்கப்பட்ட இருப்பு மதிப்பீட்டு குழுவினால் 2022 ஆம் ஆண்டுக்கான இருப்பு மதிப்பீட்டினை நிறைவு செய்ய முடியவில்லை. 2023 ஆம் ஆண்டுக்கான இருப்பு மதிப்பீடு நடை பெற்றுக் கொண்டிருக்கிறது மற்றும் 2024 யூன் 15 ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2 தீர்க்கப்படாத மீதிகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2023 யூன் 15 அன்று கொடுக்கப்பட்ட ரூபா. 301,950 தொகையான ஊழியர்களின் முற்பணம் 2023 திசெம்பர் 31 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படவில்லை. | சில ஏற்றுக்கொள்ள முடியாத பட்டியல்கள் காரணமாக, முற்பணத்தை பெற்றுக்கொண்ட பொறுப்புவாய்ந்த அதிகாரியிடமிரந்து நியாயப்படுத்தல்கள் கோரப்பட்டுள்ளன. முறையான தீர்ப்பனவு உறுதிச்சீட்டு பெற்றுக்கொள்ளப்படாமையினால், கணக்கீட்டு நோக்கங்களுக்காக செலவானது தீர்க்கப்படாமல் உள்ளது. இப்பிரச்சனையினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | முற்பணத்தை உடனடியாகத் தீர்ப்பனவு செய்தல் வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்டத்தின் செயல்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்த செயற்திட்டம் 2017 யூன் 26 அன்று ஆரம்பிக்கப்பட்டது மற்றும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 88 சதவீத இலக்கு முன்னேற்றத்தை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டது, ஆனால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக செயல் முன்னேற்றம் 69 சதவீதம் மட்டுமே அறிக்கையிடப்பட்டது. | 2024 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு 40,686 விவசாயிகளில், 30,779 விவசாயிகள் 76 சதவீதம் உடல்ரீதியாக ஈடுபடுத்தப்பட்டு, குறைந்தபட்சம் ஒரு மானியப் பொருளையாவது பெற்றுள்ளனர். மேலும் 4P மேட்சிங் மானியங்களின் கீழான நிதி இலக்கில் 40 சதவீதம் கடப்பாடுகளுக்கு எதிராக எட்டப்பட்டிருந்தன. | திட்டமிட்டதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட கால எல்லைக்குள் இலக்கானது நிறைவு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | அநுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட முருங்கை சாகுபடித் திட்டம் அதிகாரிகள் மற்றும் மேம்படுத்துனர்களின் செயற்திறமையின்மையால் தோல்வியடைந்துள்ளது. விவசாயிகளின் பங்களிப்புப் பெறுமதியைத் தவிர, திட்டத்தின் பங்களிப்பின் அடிப்படையில் சொட்டு நீர் பாசனத்திற்கான தண்ணீர் மோட்டார்களைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா. 25.52 மில்லியன் செலவு செய்யப்பட்டது. முருங்கை திட்டம் தோல்வியடைந்தமையினால் திட்டத்துடன் தொடர்புடைய விவசாய குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டனர். முருங்கை திட்டத்தின் மேம்படுத்துனர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் 2021 திசெம்பர் 05 அன்று காலாவதியாகியுள்ளது மற்றும் இதனை மேம்படுத்துனர்களுக்கு அறிவிப்பதற்கு செயற்திட்திட்ட பணிப்பாளர் 18 மாதங்களுக்கும் அதிகமாக செலவு செய்துள்ளார் | முருங்கை செயற்திட்டம் கோவிட் 19 காலப்பகுதி வரையிலும் 116 விவசாயிகளுடன் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு குறிப்பிடத்தக்க ஆரம்பகட்ட முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது. சந்தை சரிவின் காரணமாகவும ஏற்றுமதி சந்தையில் உள்ள சவால்கள் காரணமாகவும் மேம்படுத்துனர்கள் கொள்வனவு செய்வதை நிறுத்தியிருந்தனர். ஏற்றுமதித் தரத்தினை அடைவதற்கு உற்பத்தியானது 100 சதவீதம் அயற்கையானதாக இருக்க வேண்டும் என்பதுதான் செயற்திட்டத்தின் தொடர்ச்சியைப் பாதிக்கும் முதன்மைப் பிரச்சினை ஆகும். மண் எச்சங்கள் கண்டறியப்படாமையினால் செயற்திட்டத்தினால் தற்போது இந்த கடுமையான இயற்கை உற்பத்தி அளவுகோல்களை பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. ஏற்றுமதி தடைகள் காரணமாக இந்தத் செயற்திட்டம் உள்ளுர் சந்தை தேவைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தியுள்ளது. எவ்வாறாயினும், இந்த மாற்றமானது உத்தேசிக்கப்பட்ட ஏற்றுமதி இலக்குகளை முழுமையாக ஈடுசெய்யாது. செயற்திட்டத்தை மறுசீரமைப்பதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று கொண்டிருந்தன, ஆனால் இயற்கை உற்பத்திக்கான சான்றிதழ் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாமை காரணமாக, இறுதியாக SAPP செயற்திட்டத்தை இடைநிறுத்தியது. | மேம்படுத்துனர்களுக்கு மானியம் வழங்குவதற்கு முன்னர், அவர்களின் வணிகம் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். செயற்திறனற்ற மேம்படுத்துனர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து கொடுப்பனவு மானியம் திரும்பப் பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | புத்தளம் மாவட்டத்திலுள்ள சிறிய அளவிலான பாரம்பரிய நெற்பயிர்களின் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் வருமானம் மற்றும் பொருளாதார நிலையினை அதிகரிப்பதை இலக்காகக் கொண்ட பரவபோவ சுற்றாடல் விவசாயிகள் அமைப்புக்கும் மற்றும் பயனாளி விவசாயிகளுக்கும் ரூபா. 4.5 மில்லியன் தொகையான மானியம் வழங்கப்பட்டது. விவசாயிகளின் விளைபொருட்களை கொள்வனவு செய்வதற்கு பரபோவ சுற்றாடல் விவசாயிகள் அமைப்பு விவசாயிகளுடன் ஒப்பந்தம் செய்திரந்த போதிலும், பரபோவ சுற்றாடல் விவசாயிகள் அமைப்பின் தலைவருக்கு சொந்தமான பரபோவ எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் இனால் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | முதலில், பரபோவ விவசாயிகள் அமைப்பு அங்கத்துவ விவசாயிகளிடமிருந்து நெல்லினை கொள்வனவு செய்து பின்னர் பரபோவ ஏற்றுமதி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்கிறது. மேலும் விவசாயிகள் அமைப்பு விவசாயிகளின் வயல்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கொள்வனவ செய்வதற்கும் ஒரு கள உத்தியோகத்தரினை நியமணம் செய்துள்ளது. | இந்த செயற்திட்டத்தின் மூலம் பயனடைந்த விவசாயிகள் அமைப்பினர் நெல்லை கொள்வனவு செய்ய வேண்டும் மற்றும் அந்த அமைப்பு நெல்லை கொள்வனவு செய்யாவிட்டால், அவர்களுக்கு வழங்கப்பட்ட மானியத்தினை மீள அறவிட செய்ய வேண்டும். |
| (ஈ) | அப்போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழான விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் பகுதி 01 இலிருந்து ரூபா. 9 மில்லியன் மானியங்கள் பெறப்பட்டன மற்றும் விவசாய அமைச்சின் கீழ் SAP திட்டத்தின் மூலம் நெல் களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா.கு 2.7 மில்லியன் மானியங்கள் பரபோவ சுற்றாடல் விவசாயிகள் அமைப்பின் மேம்படுத்துனரான பரபோவ ஏற்றுமதி நிறுவனத்தின் உரிமையாளரால் பெறப்பட்டது. விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம் பகுதி 01 இலிருந்து பெறப்பட்ட ரூபா. 9 மில்லியன் மானியங்களுக்கான எதிர்பார்த்த வேலைகள் நிறைவேற்றப்படவில்லை. | பரபோவா திட்டம் என்பது விவசாய அமைப்புடன் கைச்சாத்திடப்பட்ட 4P எண்ணக்கருவின் கீழ் உள்ள ஒரு பெறுமதி சங்கிலி திட்டமாகும். பாரம்பரிய நெல் சாகுபடி முன்மொழிவிலும் மற்றும் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திலும் களஞ்சிய வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே, விவசாயிகளிடம் இருந்து சேகரிக்கப்படும் நெல்லை ஏற்றுமதியாகும் வரை களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக பயன்படுத்தப்படும் அந்த வசதியை ஏற்படுத்துவதற்காக ரூபா. 2.7 மில்லியன் தொகையினை மானியமாக வழங்கி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த SAPP நடவடிக்கை எடுத்துள்ளது. ஏற்றுமதி நிறுவனத்திற்கு நூடுல்ஸ் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக ரூபா. 9 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது என்று மேம்படுத்துனரால் (FO) எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. | SAP நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை செயல்படுத்தும் போது, திட்டம் செயல்படுத்தப்படும் பகுதியிலுள்ள அரசு அதிகாரிகள் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாத்தளை மாவட்டத்தில் 2500 பயனாளிகளை இலக்காகக் கொண்டு ரூபா. 292 மில்லியன் தொகையினை செலவழிக்க எதிர்பார்த்து மேற்கொள்ளப்பட்ட மிளகுப் பயிர்ச் செய்கை திட்டத்திற்கு எதிர்பார்த்த பங்களிப்பிலிருந்து ரூபா. 89 மில்லியன் தொகையினை மட்டுமே SAPP செலவு செய்துள்ளது. இத்திட்டத்தின் அமுலாக்க திட்டத்தின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டில் செய்யப்பட வேண்டிய அறுவடை சேகரிப்பு நிலையங்கள் மற்றும் உயர்தர செயன்முறை நிலையங்களினை அமைக்கும் வேலை நடைபெறவில்லை. | ரூபா. 2,635,351 பாதீட்டின் கீழான செயலாக்க நிலையத்தின் நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து வந்த விலைவாசி உயர்வு காரணமாக இந்த தொகை போதுமானதாக இல்லை என்று கண்டறியப்பட்டது. | ஒரு திட்டத்தைத் தெரிவு செய்யும் போது, அதன் பயன்கள் சமூகத்திற்குத் திரும்பக் கிடைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு வினைத்திறனாக செயல்படுத்தப்படல் வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டுதல்களின் 5.3.10 மற்றும் 5.3.11 பந்திகளுக்கு முரணாக செயலாற்றுகை பிணை அல்லது விலைமனுவுக்கான பிணையினை பெற்றுக்கொள்ளாமல் நிகழ்ச்சித்திட்டத்திற்கான சர்வர் மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டது. விலை மனுவினை திறக்கும் போது பெறுகை வழிகாட்டுதல் கோவையின் 6.3.1 ஆம் பந்தி மீறப்பட்டது. விலைமனுவினை திறப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்படவில்லை மற்றும் தகவல் தொழில்நுட்ப அதிகாரியின் தொழில்நுட்ப பரிந்துரையின் பேரில்ரூபா. 974,600 கிரயத்தில் சர்வர் மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டது. | 2006 ஆம் ஆண்டின் பெறுகை கையேட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட பெறுமதியினை கருத்தில் கொண்டு, செயலாற்றுகை பிணை மற்றும் விலை மனுவுக்கான பிணை என்பன அவசியம் இல்லாத கொள்வனவு (ஷாப்பிங்) நடைமுறையையினைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த பெறுகை மேற்கொள்ளப்பட்டது. | பெறுகை வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | SAPP/PRQ/GDS/2022/10 ஆம் இலக்க ஒப்பந்தத்தின் கீழ் ரூபா. 5,654,726 பெறுமதியுள்ள அலுவலக உபகரணங்களை (அச்சுப்பொறி, போட்டோ பிரதி இயந்திரம் , டோனர், மரம், புகைப்படகருவி , 04 புரொஜெக்டர்கள்) பெறுகை செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படவில்லை. | "அலுவலக உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு" என்ற பெறுகை கோப்பின் கீழ் ரூபா. 5,654,726 தொகையான பெறுமதியில் வெவ்வேறு பெறுமதிகளில் சில பெறுகைகள் செய்யப்பட்டுள்ளன. செயற்திட்ட பணிப்பாளரின் அதிகார கையளிப்பின் கீழ் நான்கு பெறுகைகள் காணப்படுகின்றன. | பெறுகை வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படல் வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத / குறை பயன்பாட்டுடைய வளங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் 2023 யூன் 30 அன்று நிறைவு செய்யப்படல் வேண்டும் என்றபோதிலும் 2025 திசெம்பர் 30 வரைக்கும் செயற்திட்டத்தினை தொடர்லதற்கு IFAD ஆல் அங்கீகாரம் வழங்கப்பட்டது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிப் பயன்பாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்ளும்போது, IFAD இனால் கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்ட 54.4 மில்லியன் அமெரிக்க டாலர்களில் இருந்து 28.16 மில்லியன் அமெரிக்க டாலர்களை மட்டுமே இந்த செயற்திட்டம் பயன்படுத்தியுள்ளது. சதவீதமாக பார்க்கையில் இது 51.76 சதவீதமாக காணப்பட்டது. எனவே, மீதமுள்ள இரண்டு ஆண்டு காலப்பகுதியை மீதமாக உள்ள நிதிகளுடன் கருத்தில் கொள்ளும்போது நிதியின் பயன்பாடு வினைத்திறனாக காணப்பட்டது. | 2024 மே மாத இறுதியில் உள்ளவாறு IFAD நிதியின் பயன்பாடு 63 சதவீதமாக உள்ளது மற்றும் இந்த ஆண்டில் 80 சதவீத முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு SAPP திட்டமிட்டுள்ளது. | உரிய கால அட்டவணைக்குள் இலக்கானது நிறைவு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | SAPP இற்காக இலங்கை அரசாங்கத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த பங்களிப்பு 19.30 மில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும் மீளாய்வாண்டின் இறுதியில் அரச நிதியின் ஒட்டுமொத்த பயன்பாடு 10.25 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மட்டுமே ஆகும். மேலும் இது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையில் 53 சதவீதத்திற்கு சமமாக காணப்பட்டது. இந்த செயற்திட்டம் 2025 திசெம்பர் 31 இல் அன்று நிறைவடையும். மேலும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க நிதியில் மீதமாக உள்ள 47 சதவீதத்தினை பயன்படுத்துவது நிச்சயமற்றதாகும். | 2024 மே மாத இறுதியில் உள்ளவாறு அரச நிதியின் பயன்பாடு 72 சதவீதமாக உள்ளது மற்றும் இந்த ஆண்டில் 87 சதவீத முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு SAPP திட்டமிட்டுள்ளது. | உரிய கால அட்டவணைக்குள் இலக்கானது நிறைவு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளளிப்பு செய்யக்கூடிய வெளிநாட்டுக் கடனான ரூபா. 4,340 மில்லியன் ஒதுக்கீட்டில் இருந்து மீளாய்வாண்டில் ரூபா. 2,278 மில்லியனை மட்டுமே செயற்திட்டமானது பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, மொத்த ஒதுக்கீட்டில் 48 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா. 2,062 மில்லியன் தொகையானது ஒதுக்கீடானது செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மில்கோ செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யும் உபகரணங்களுக்கான வரி காரணமாக இந்த சேமிப்பு ஏற்பட்டது. பெறுகை நடைமுறையில் உள்ள காலதாமதம் காரணமாக திட்டமிடப்பட்டவை பயன்படுத்தப்படவில்லை. நிரல் முகவர்களினால் பரிந்துரைக்கப்பட்ட விவசாயிகளின் பட்டியல்கள் போன்ற ஆதார ஆவணங்களைப் பெறுவதில் தாமதம் காரணமாக சோள | ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செயற்திட்டத்தின் அடையாளம் காணப்பட்ட இலக்குானது நிறைவு செய்யப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | விதை மற்றும் உர உறுதிச்சீட்டுக்களை செயற்படுத்த முடியவில்லை. ரூபா. 2,000 மில்லியன் பெறுமதியான உறுதிச்சீட்டுக்களுக்கு கொடுப்பனவுகள் செய்யப்பட்டன. எவ்வாறாயினும், சோள விதை, உரம் மற்றும் நிலத்தை தயார்படுத்தல் ஆகியவற்றிற்கான இந்த கொடுப்பனவுகளில் 90 சதவீதமானவை 2024 இல் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன. | |
| (ஈ) | மொத்த ஒதுக்கீட்டில் 25 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு வாக்குத் தலைப்புக்கள் மூலம் பெறப்பட்ட GOSL ஒதுக்கீடான ரூபா. 1,876 மில்லியனில் ரூபா. 466.48 மில்லியன் செயற்திட்டத்தின் மெதுவான செயல்முன்னேற்றம் காரணமாக பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2023 நவம்பர் இல் திறைசேரியிடம் இருந்து நிதி கோரப்பட்டிருந்த போதிலும், CBSL க்கு மாற்றுவதற்கு கட்டுநிதியானது விடுவிக்கப்படவில்லை. | ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செயற்திட்டத்தின் அடையாளம் காணப்பட்ட இலக்குானது நிறைவு செய்யப்படல் வேண்டும் |
| (உ) | மிளகுப் பயிர்ச் செய்கை செயற்திட்டம் தொடர்பில் பண்ணைக்கு வெளியேயுள்ள வசதிகளை அபிவிருத்தி செய்வதன் கீழ், அம்பங்கங்க கோரலே கும்பலொலுவ பிரதேசத்தில் ரூபா. 1.7 மில்லியன் கிரயத்தில் மிளகு சேகரிப்பு நிலையமொன்றும் இரத்தோட்டை, பண்டாரபொல பிரதேசத்தில் ரூபா. 1.7 மில்லியன் கிரயத்தில் மிளகு சேகரிப்பு நிலையமொன்றும் நிர்மாணிக்கப்பட்டது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிலையங்கள் முழு செயற்திட்டத்திற்கும் பயன்படுத்தப்படவில்லை. | எவ்வாறாயினும், பல்வேறு காரணங்களால், ஆரம்பத்தில் எதிர்பார்த்த அளவு மிளகு சேகரிக்கப்படவில்லை. இந்த நிலையங்களை நிர்மாணிப்பதை ஒருங்கிணைக்கும் மாத்தளை மாவட்ட செயலாளரும் இந்த விடயங்களை எடுத்துரைத்துள்ளார். பயன்பாட்டில் இல்லாத காரணத்தால் வசதிகள் தற்போது செயலிழக்கவில்லை, மாறாக் வெளிப்புற சூழல் காரணிகள் காரணமாக அறுவடையின் அளவை பாதிப்படைகின்றது. | வினைத் திறனாகவும் விளைதிறனாகவும் நிதியை பயன்படுத்ததுதல் வேண்டும் |
| (ஊ) | 350 பயனாளிகள் இலக்கு வைக்கப்படிரந்த பொதிலும், உண்மையில் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 85 ஆகும். ஏழு கறுவா பதப்படுத்தும் நிலையங்கள் நிர்மாணிக்கப்படவிருந்தன, இருப்பினும், 2023 திசெம்பர் 31 வரையிலும் கறுவா பதப்படுத்தும் நிலையங்கள் நிர்மாணிக்கப்படவில்லை. | புதிதாக நிறுவப்பட்ட கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் பதனிடும் நிலையங்களை நிர்மாணிப்பதற்கான மாற்று வழிகளை மதிப்பிடுவதற்கும் திட்டமிட்டபடி விவசாயிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. | திட்டமிடப்பட்ட இலக்குகள் வினைத்திறனாக அடையப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கேவன்டிஷ் வாழைத் தோட்டத் திட்டத்திற்காக 28 பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் ரூபா.15.6 மில்லியன் கடனுதவி வழங்கப்பட்டிருந்தது மற்றும் கணக்காய்வு திகதியில் உள்ளவாறு வாழைத் தோட்ட செய்கை தோல்வியுற்றமையினால் கடனை செலுத்தத் தவறியமை அவதானிக்கப்பட்டது. மேலும் கேவென்டிஷ் வாழை பயிர்செய்கைத் திட்டம் தோல்வியடைந்ததையும், அதற்கான செலவுகள் உபயோகமற்றதாக இருந்ததையும் அவதானிக்க முடிந்தது. | இந்த செயற்திட்டம் 2021 யூலை முதல் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு முதல் பயிர்ச் சுழற்சியின் இறுதி வரை தொடர்ந்தது. ஆனால் அதன் பின்னர் கனிம உர நெருக்கடி காரணமாக அது பாதகமான விளைவுகளுக்கு உட்பட்டது. அந்த காலக்கட்டத்தில் இறக்குமதி தடை காரணமாக கனிம உர தட்டுப்பாடு ஏற்பட்டு செயற்திட்டத்தினை மோசமாக பாதித்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான தந்திரோபாயங்கள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படல் வேண்டும் |

## 3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூனகல விவசாய உற்பத்தித்திறன் கிராம கூட்டுறவு சங்கத் திட்டத்தின் கீழ், முந்தைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கூடுதலான பங்களிப்பின் அறிக்கைகள் காரணமாக நடைமுறை ஆண்டில் விவசாயிகளின் பங்களிப்பிலிருந்து ரூபா. 15 மில்லியன் கழிக்கப்பட்டது. சதவீதமாக பார்க்கையில், இது நடைமுறை ஆண்டிற்கான விவசாயிகளின் பங்களிப்பின் ஆரம்ப மீதியில் 59.91 சதவீதமாக காணப்பட்டது. | மஞ்சள் கொத்துத் திட்டம்-ருஹுனு புட்ஸ் செயற்திட்டத்தின் கீழ் கணக்குவைக்கப்பட வேண்டிய ரூபா. 15,234,648 தொகையானது தவறுதலாக 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் கோனகல மஞ்சள் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இந்த வழு 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்பட்டுள்ளது. | விவசாயிகளின் பங்களிப்பு துல்லியமாக வெளிப் படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ தகவல் முறைமையினை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக 2022 சனவரி 01 அன்று ஒப்பந்ததாரருடன் ரூபா.4.88 மில்லியன் ஒப்பந்தத் தொகைக்கு இந்த செயற்திட்டம் கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்த உடன்படிக்கையானது ஐந்து தடவைகள் ஒரு வருடம் மற்றும் இரண்டு மாதங்களுக்காக நீடிக்கப்பட்டு 2023 மே 31 அன்று நிறைவடையும் என்று உடன்பட்டு கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் ஒப்பந்ததாரர் 2023 நவம்பர் 28 அன்று MIS இனை இணையத்தளத்தில் வெளியிட்டிருந்தார். | SAPP இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவில் உள்ள பதவிகளின் நிலையற்ற தன்மை மற்றும் எரிபொருள் கிடைக்காமை போன்ற பல்வேறு காரணங்களால் கணினி பகுப்பாய்வு மற்றும் MIS சோதனையில் ஏற்பட்ட காலதாமதத்தினால் MIS ஒப்பந்தம் ஐந்து தடவைகள் நீடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த முறைமை 2023 நவம்பர் முதல் பயன்பாட்டில் உள்ளது மற்றும் 2019 முதல் கணினியில் இல்லாத தரவு உள்ளிடப்படுகின்றன. | ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செயற்திட்டத்தின் இலக்குகள் அடையப்பெறல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முகாமைத்துவ தகவல் முறைமையில் 30 சதவீத தகவல்களை (ஒட்டுமொத்தம்) மட்டுமே இந்த செயற்திட்டம் 2024 ஏப்ரல் 04 இற்குள் உள்ளீடு செய்துள்ளது. இதனை தவிர, 4P செயற்திட்டத்தின் நிலைமை, வழங்கப்பட்ட மானியத்தின் நிலைமை மற்றும் வழங்கப்பட்ட கடனின் நிலைமை பற்றிய தகவல்கள் முகாமைத்துவ தகவல் முறைமையில உள்ளிடப்படவில்லை. | தற்போது மொத்த இலக்கில் 38 சதவீதம் நிறைவடைந்துள்ளன. சுமார் 18,000 விவசாயிகளின் மீதியின் தகவல்கள் 2-3 வாரங்களில் உள்ளிடப்படும். விவசாயத்திற்கு புறம்பான நடவடிக்கைகள், நிறுவனங்களை வலுப்படுத்துதல் போன்ற பிற தகவல்களை வழங்குவதும் 2024 யூன் இறுதிக்குள் நிறைவு செய்யப்படும். | ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செயற்திட்டத்தின் இலக்குகள் அடையப்பெறல் வேண்டும். |
| (ஈ) | மாட்டு கொட்டகைகள் அமைப்பதற்கும், மாடுகளுக்கு தண்ணீர் வழங்குவதற்கு தேவையான உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கும், பால் சேகரிப்பு பாத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கும், குளியாப்பிட்டிய தென்னை முக்கோணத்திலுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் வீரகம பிரதேசத்தில் உள்ள 150 பால் பண்ணையாளர்களுக்கு மொத்தமாக ரூபா. 16 மில்லியன் மானியமாக வழங்க முன்மொழியப்பட்டது. 12 சந்தர்ப்பங்களில் ரூபா. 11 மில்லியன் விடுவிக்கப்பட்டது. | | |
| i. | 150 எண்ணிக்கையான பால் பண்ணையாளர்கள் பதிவு செய்திருந்த போதிலும், அவர்களில் 26 பேர் பால் பண்ணை நடவடிக்கைகளில் இருந்து விலகியுள்ளனர். பால் பண்ணை நடவடிக்கைகளில் இருந்து விலகிய விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்ட ரூபா. 635,216 தொகை மற்றும் சலுகைக் கடனாக வழங்கப்பட்ட ரூபா.1,820,000 தொகை என்பன பயன்படுத்தப்படாத செலவுகளாக இருந்தன. | பல்வேறு காரணங்களால் 26 விவசாயிகள் வெளியேறியுள்ளனர். ஆனால், இந்த விவசாயிகள் வங்கிகளில இருந்து பெற்றுக்கொண்ட கடனைத் மீள செலுத்தவில்லை. | சரியாக திட்டமிடல் மற்றும் சரியான பயனாளிகள் அடையாளம் காணப்படல் வேண்டும் |
| ii. | பால் பண்ணை செயற்திட்டத்துக்கான ஒதுக்கீட்டில் ரூபா. 7 மில்லியன் கொங்கிரீட் வீதிகளுக்கும் ரூபா.372,000 தியதொர அணைக்கட்டை திருத்தம் செய்வதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியானது செயற்திட்டத்தின் நோக்கத்திற்குப் | நேரடியாக 150 மற்றும் மறைமுக 262 எணிணிக்கையான பால் பண்ணை குடும்பங்கள் பயனடையும் வகையில் பண்ணைக்கு வெளியே உள்ள நடவடிக்கைகளுக்காக ரூபா.10 மில்லியன் பாதீடொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நேரடியன | திட்டத்தின் நோக்கத்திற்கு புறம்பாக இருக்கும் செலவுகள் தவிர்க்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புறம்பான ஒரு நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டதை அவதானிக்க முடிந்தது. | மற்றும் மறைமுகமான பயனாளிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, இந்த உள்கட்டமைப்பு அபிவிருத்திகள், பண்ணை உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகளின் போக்குவரத்தை எளிதாக்கும், அதன் மூலம் பால் பண்ணை நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் திட்டத்தின் நோக்கத்துடன் இணைந்துள்ளது. | |
| (உ) | பெலவத்த டயரீஸ் மற்றும் கொலம்பேஜ் டிஸ்ரிபியூட்டர்ஸ் ஆகிய நிறுவனங்கள் மூன்று வருட காலத்திற்கு முறையே பால் அபிவிருத்தி மற்றும் விதை உருளைக்கிழங்குக்காக சிறுநிலவுடமையாளர் வேளாண்மைத்தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்துடன் (SAPP) உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்தன. ஆனால், இந்த கம்பனிகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் எந்தப் பங்களிப்பிலும் ஈடுபடவில்லை. மேலும், அந்த நிறுவனங்களின் இணங்கப்பட்ட காலப்பகுதி 2023 யூலை மாதத்தில் முடிவடையும். செயற்திட்டத்தின் முன்னேற்றம் பலவீனமான நிலையில் உள்ளமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் பெலவத்தை பால் பண்ணை திட்ட ஒப்பந்தம் 2021 இல் கைச்சாத்தானது மற்றும் 2023 ஆகஸ்ட் வரையிலும் மேம்படுத்துனரின் பலவீனமான ஈடுபாடு மற்றும் ஒருங்கிணைப்பு காரணமாக செயற்திட்டம் மிகவும் மெதுவாக நகர்கிறது. | இந்த திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற அலுவலர்கள் பணியாற்றுதல் வேண்டும். |
| (ஊ) | செயற்திட்ட தயாரிப்பாளராக செயற்படும் லங்கா எக்கோ புறடக்ட் கறண்டி லிமிட்டட் வழங்கவுள்ள பங்களிப்பின் பெறுமதி ரூபா 34.6 மில்லியன் ஆகும். 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த கம்பனி வழங்கிய பங்களிப்பு ரூபா 9 மில்லியனுக்கு அருகில் மாத்திரமே உள்ளது. மேலும், செயற்திட்டத்தால் அறிக்கையிடப்பட்ட செலவினங்கள் தொடர்பான ஏதேனும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அல்லது ஏனைய தொடர்புடைய ஆவணங்கள் நிறுவனத்தில் காணப்படாததால் லங்கா எக்கோ புறடக்ட் கறண்டி லிமிட்டட்டால் சுட்டிக்காட்டப்பட்ட செலவினங்கள் அடிப்படையற்ற தவறான பெறுமதிகளாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அறிக்கையிடப்பட்ட அனைத்து மேம்படுத்துனர் பங்களிப்புகளும் உள்ளக கணக்காய்வாளரால் அவரது பௌதீக ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட அல்லது M&E பிரிவினால் அவர்களின் கண்காணிப்பு பொறிமுறையால் சான்றளிக்கப்பட்டமை காரணமாக SAPP மேற்கூறிய அவதானிப்புடன் உடன்படவில்லை, | செலவுகளானவை கொடுப்பனவு செய்யப்படுவதற்கு முன்னர் உள்ளக கணக்காய்வாளர் மற்றும் M & E பிரிவினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். |